உ

சைவத் தெளிவு

ஆசிரியர்

வேதமொழி பெயர்ப்பாசிரியர்

சிவானந்த யதீந்திரர்

சென்னை

காசி விசுவநாதர் பால பக்த சபை

வெளியீடு

உ

சிவமயம்

சைவத் தெளிவு

இது

வேதமொழி பெயர்ப்பாசிரியர்

உயர்திரு ! காசிவாசி

சிவாநந்த யதீந்திர சுவாமிகளால்

இயற்றப்பெற்று

சென்னை, காசிவிசுவநாதர்

பால பக்த சபையாரால்

வெளியிடப்பட்டது

1936

1/2

மெய்யன்பர்காள் !

சென்னை, கிருஷ்ணப்ப நாயகர் குளத்தெருவில் 23-6-36 மங்களவாரம் மாலை 6-மணிக்கு நடந்த உபந்யாசங் கட்குத் தலைமை வகித்தபொழுது திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T., ஸ்ரீமதி E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. இவ்விருவர்களாலும் நிகழ்த்தப்பெற்ற சைவ உபந்யாச சம்பந்தமாய் "சைவம்" என்பதின் பொருளை உலகறிந்துய்யுமாறு சுருக்கமாய் இவ்வுபந்யாசத்தை எழுத லானேன் உலகம் ஏற்றுக்கொள்க. சைவந் தழைத்தோங் குக.

வேதமொழிப் பெயர்ப்பாசிரியர்

காசிவாசி

சிவானந்த யதீந்திர சுவாமிகள்.

PRINTED AT THE SELVARANGAN PRESS, MADRAS.

சிவாய நம:

சைவத் தெளிவு

அறுவகைச்சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங்(கு)
அறிவினில் அருளால் மன்னி அம்மையோடு அப்பனாகிச்
செறி வொழியாது நின்ற சிவனடி சென்னிவைப்பாம்.

ஆன்ம நேயர்களே !

பண்டைக்காலந் தொட்டே கடவுள் நெறிக்கொள்கை இந்நாட்டில் வழங்கி வந்திருக்கின்றது. அதுவும், வேள்விப் பாலதாகிய ஆரியக்கொள்கை யெனவும், பொழிலகத்தே செய்யும் வணக்கம் முதலான உருவ வழிபாடு எனவும் இருதிறப்படும். இதுவே, மதம், சமயம், கொள்கை, உடன்பாடு எனப் பலவகையாய் வழங்கப்படுகின்றது.

பின்னர், மனக்கோளையே முதற்காரணமாகக்கொண்டு ஒன்று சொன்னபடி ஒன்று பேசாத சமயமோ, அனந்தங்கள் தோன்றின. இவை, கடவுள், நூல், சமயநூலவர், சொல் என்பன முதலானவற்றின் பெயரைக் காரணமாகக் கொண்டெழுந்தன.

அதன்பின்னர், "தோல்வியும் வெற்றியும் சொல் மதங்கட்கெலாம், காலபேதத்தினுண்டுந்திபற கருத்தன் செயலதென் றுந்திபற," என்றவாங்கு, எண்ணிறந்த சமயப் போராட்டங்களும் மிருந்தன. மற்றும், சமயங்களுடன் வருணுசிரமங்கள் முதலானவைகளும் நன்கு கலக்கப்பெற்று அவைகள் உருவழிந்தன. இவற்றுள்,

ஒன்ருேடொன் டோவ்வா மதங்களொன்ருென்றினுல்
பொன்றுவ தில்லையேலுந் தீபற
பொய் என்பது எத்தை நாம் உந்தீ பற.

ஆனுலும், அவற்றுள் அறுசமயங்களே இனிது கொள்ளற்பாலனவென்பது அறிவுடையார் கொள்கை. அவற்றுள்ளும், "சைவ சமயமே சமயம்," எனவும், "சைவத்தின் மேற் சமயம் வேறிலே" எனவும், மற்றும் பிறவாற்ருனும் வேதாகம புராணங்களும், உண்மை நூல்களும், எல்லாச் சமயங்களினும் சிறப்புடைத்தாய் எடுத்தோதுகின்ற 'சைவம்' என்பதற்கு, கால தேசங்களைப்பற்றி நிகழும் கற்பனை வடிவக் கருத்துக்கியைந்தவாறே எண்ணிறந்த மயக்கப்பொருளைக் கொண்டுமக்கள் மயங்குகின்றனர் என்பது உலகமறியும்.

அவற்றுள், நமது நாட்டில் புலாலுண்ணுமையே சைவமெனல் பெரும்பாலார் கொள்கை. அதுவும் நூல்களுக்கும் ஆன்ருேர்க்கும், எமக்கும் உடன்பாடாம். என்னை?

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்."

என்று, தமிழ்மறையு மோதுதலா லென்க.

அங்ஙனமாயினும், புத்த சமயமும், சைன சமயமும் கொல்லாமையையே மேற்கொண் டொழுகுவனவாமாத

லின், ஈண்டு அவைகளும் சைவ சமயங்கள் என்பதும் வரும். மற்றும், சைன சமயமும், புத்த சமயமும் சீவகாருண்யத்தையே அடிப்படையாகக் கொண்டெழுந்து நாளிதுவரை வழுவாது சீவகாருண்ய வொழுக்கத்தில் மேம்பாடடைந்து வருதலின் மிகச் சிறந்த சைவமென்பதும் இழுக்காகாது.

அஃதன்றியும், மான், முயல், ஆடு முதலான விலங்குகள் பிறப்பிலிருந்தே புலாலுண்ணுதனவாதலின் அவைகளும் சைவங்கள் எனலும் மேல் விழுந்து தொடரும். ஆதலின் புலாலுண்ணுமை மாத்திரமே சைவ மெனல் உபசாரமாம்.

அற்றேல், புலாலுண்ணுமையோடு சிவனைவழிபடலே சைவமெனின்? புலாலுண்ணுமையையும், சிவ வழிபாட்டையும் உடைய சில தமிழ்மக்களை, சிலர், சைவரல்லர் என ஒதுக்கிவைப்பதுடன் பழித்துந்தள்ளுகின்றனர். மற்றும், பிறப்பாற் சைவமெனக்கொண்ட குலப்பித்துக்கொண்டார்கள், புலாலுண்பதையும் சிவ வழிபாடிலாமையையுங் கண்ணுரக்கண்டும் சைவரேயெனக்கொண்டு மகிழ்கின்றனர். அஃதன்றியும், சிலதமிழ்மக்கள் புலாலுண்ணுது சிவ வழிபாட்டில் தற்பரர்களாயிருப்பினும் அவர்களை, போலிச்சைவப் பொய் பொழுக்கமுடையார்கள்சிலர் அசைவரெனப் பழிக்கின்றனர்.

அஃதல்லாமலும், நாயன்மார்களிற் சிலர் புலாலுண்டும், சிவவழிபாடிலாதும், சைவசமயத்தலைவராய்ச் சிவனருட்பெற்றுய்ந்தனர் என்பதையும் புராணங்கூறுகின்றது. ஆதலின் புலாலுண்ணுது சிவ வழிபாடு செய்தல் சைவநெறியாமன்றி, சைவமல்ல வென்றுணர்க.

அற்றேலஃதாகுக, சிவதீட்சைப்பெற்றுக்கொள்ளலே "சைவம்" எனின்? சைவத்தலைவர்களாயிருந்த நாயன்மார்கள் முறையாய்ச் சிவதீட்சை பெற்றுக்கொண்டனரென்பது வெளிப்படையாய்த் தோன்றுமையானும், சிவதீட்சை பெற்றார் சிலர் சிவனருளையே பெற்றுய்ந்தாரெனல் வரையறுக்கப்படாமையானும், இதுவும் முடிந்தபொருளாகா. அன்றியும், பண்டைக்காலத்து மக்கள் பேரன்புடன் பொழிலினிடத்துக் கடவுளை முக்கரணங்களாலும் வழிபட்டுய்ந்தனர் என்பது சமய ஆராச்சிமுறையிற் புலப்படுகின்றதேயன்றி, சமயச்சடங்குகள் பெருப்பான்மையும் சிவனருளைப்பெற முக்கியங்களென்பதுந் தோன்றவில்லை.

உயிர்க்குயிராகிய இறைவன்பால் அன்பு குறையக் குறைய சிவபுண்ணியங்களில் பொய்களும் வழுக்களும் தோன்றியபின்னர், ஆன்றோர் சமயச்சடங்குகளை விதித்துள்ளார் என்பதும் யூகிக்கக்கிடக்கின்றது. ஆதலின் சைவசமயச்சடங்குகள் மனங்குவியச்செய்யும் ஒருவகை வெளிக்கருவிகளாம்.

அற்றேல், சிவபூசை செய்தலே சைவமெனின்? சிவபூசைபண்ணாத பிறப்புச்சைவம் அசைவமாய் முடிவதுடன், சிவபூசைசெய்யும் வேதாந்த மதமும் சைவமேயாம் ஆமெனின்? பழித்தல் எற்றுக்கு? அவர்கள் பொய்யெனக் கொண்டுள்ளாரெனின்?

"பேய்த்தேர் முகக்குறும் பேணதகுணமாகாயே" எனவும், "மனக்கோளல்லது வடிவுநிற்கின்றே" எனவும், பிறவும் கூறுமாற்றானும், வழிபடல் என்பதும், வழிபாட்டாற் பெறும், பயனும், நித்தியத்தன்மையையே மேற்கொண்ட

தன்று. ஏதுபாவித்திடினும் அதுவாகவந்தருள்தலின், சிவபூசைமுதலியன சைவத்திற்கு உட்கருவிகளாம்.

அற்றேல், சைவநூல்களைக் கற்றுணர்ந்து மக்களுக்குப் போதித்தல் "சைவம்" எனின்? சைவனூல்களைக் கல்லாமலும், பிறர்க்குப்போதிப்பதுமின்றி, உண்மை நெறிநின்று கண்மூன்றுடையான் கழலடைந்த நாயன்மார்களுட் சிலரின் கொள்கை அசைவமென்பதும் வரும். சிலசைவர், உடலோம்புதற்பொருட்டு, மகமதியர், கிறித்துமுதலான மதங்கட்கு, போதகராயிருத்தலின், அவர்கள் அசைவரெனப்படுவர். ஆகலின், சைவநூற்கற்று பிறர்க்குப் போதித்தலும் சைவ நெறியிலொன்றும்

சைவநூலியற்றல் சைவமெனின்? சைவ ஒழுக்கமற்ற தண்டமிழ்ப்புலவரும் கல்விவலியால் சைவமரபு வழுவாது நூலியற்றும் ஆற்றலுடையாராதலானும், தங்களை மறுக்கப் புகுந்தாரும் சமயநூலெழுதும் மரபாமாதலானும் இதுவும் சைவநெறியை வலியுறுத்தும் ஒருவகை நன்னெறியாம். பிறமதங்களை மறுக்குமாற்றலுடைமையே "சைவம்" எனின்? எல்லா மதங்களாலும் போற்றப்படும் தெய்வம் பரசிவமேயாதலினானும், எல்லா மதங்களையும் தம்முளடக்கிக்கொண்டு நிற்கும் பெற்றித்ததே உண்மைச் சைவமாமாதலானும் இதுவும் பொருத்தமான சைவமாகா.

அற்றாகலினன்றே,

"வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்துபார்க்கின்
விளங்கும் பரம்பொருளே நின்விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை"

எனவும், "ஆறு சமயங்கடோறும் வேறு வேருகி விளையாடு முனையாவரறிவார்" எனவும், "அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" எனவும், "அறுசமயக் கூத்துமாடி" எனவும் மற்றும் பிறவும் கூருகின்றன.

அன்றியும், இப்பொருளேயே, "இதுவாகும் அதுவல்லது எனும் பிணக்கதின்றி, நீதியினுன் இவையெல்லாம் தம்மிடத்தே காண நின்றது யாது ஒரு சமயம் அதுசமயம்" என்று சித்தியார் வாக்குந் தெளிவாய் அறிவுறுத்துகின்றது. மற்றும், சமயப் போராடுவோரை நோக்கியே,

"ஒன்றதே பேரூர் வழியதற் காறுளது
என்றதேபோல இருமுச் சமயங்கள்
நன்றிது தீதிது என்றுரை யார்த்தர்கள்
குன்றகுரைத் தெழுநாயை யொத்தாரே"

என வெறுத்துக் கூறிப் பழிக்கின்றது. திருமந்திரமும் ஈண்டு உண்மைச் சைவத்திற்கு மதப்போராட்டமின்றெனல் கொள்ளக் கிடந்தமை காண்க.

அற்றேல், உண்மைச் சைவநெறியை உறுதியாய்க் கைக்கொண்ட பிறமக்களிடத்தும் உண்ணுது நீர் அருந்தாது அன்பு பாராட்டாது தனித்துநின்று சைவம் என வழங்குவதே சைவமெனின்? இதை ஊரத்துச் சொல்லற்க. என்னே? பிறர் கேட்கில் நகைப்பர். அற்றேல் இது அத்துணை அருவருக்கத் தக்கதாகுமோ? ஆம். எதனுல்? எல்லா நூல்களுக்கும், பெரியார்க்கும், சிவனுக்கும், சிவனடியார்களுக்கும் சம்மதமாகாததோடு மாறுபட்டதுமா மாதலின் என்க.

அன்றியும், ஆரியர்க்கே பிரமஞானந் தோன்றுமென்ற அபிப்ராயக்கொள்கை போன்று. சாதிசைவர்க்கே சைவங் கூடுமெனும் பொய்க்கொள்கையும் உறுதிப்பட்டமையின். ஏனைய மக்கள் கண்மூடிக்கொண்டிருப்பரேல் போலிச்சைவப் பொய்நெறியாளர்க்கே சிவனருட்சமயம் கூடுமெனலும் சின்னாளில் வந்துவிடும் என்பதற்கு ஐயப்பாடுமுண்டோ? தமிழ் மக்கள் இவ்விஷயத்தில் விழித்திருப்பாராக.

சைவசமய குரவர்கள் அவ்வாறு கூறியுள்ளார் எனின்? அவ்வண்ணங்கூறியவர் அசைவகுரவர் என்றொதுக்கற்பாலார்.

இதுபற்றியே, சைவத்துறையை விளக்கிய சம்பந்தப் பெருமானார், மக்களுடைய மனக்கோட்டம் அகலுமாறு,

"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்கு
இங்கே என்று அருள்புரியும் எம்பெருமான்"

என்று இறைவனது பேரருட் பெருக்கைக் கூறியருள்வதுடன்,

"குலவராகக் குலம் இலருமாகக் குணம் புகழுங்கால்
உலகின் நல்லகதி பெறுவர்"

என்றும் திருவாய்மலர்ந்தருளினர்.

இப்பொருளையே, முண்டகோப நிடதமும், "யஃ சண்டாள: சிவ இதிவாசய்" அதாவது, சண்டாளனாயினும் சிவன் என்னும் மொழியை எவன் சொல்கின்றானோ, அவனோடு பேசுக, அவனோடு ஒத்திருக்க, அவனுடன் அருகிருந்துண்ணுக என்று வலியுறுத்துகின்றது.

மற்றுப், இதையே,

"புலையரே யெனினும் ஈசன் பொலன் கழலடியிற் புந்தி
நிலையரே லவர்க்குப் பூசை நிகழ்த்துதல் நெறியே யென்றும்"

என்று சிவதருமோத்தரமும்,

எள்ளற்படு கீழ்மக்களெனும் இழிந்த குலத்தோரானாலும்
வள்ளற் பரமன் றிருநீறு மணியுமணிந்த மாண்பினரை
உள்ளத்துள் ளேயிருபோது முணர்ந்துதெருண்டு சிவனெனவே
கொள்ளத்தகைய அறிவினரே பிறவிக்கடலிற் குளியாதார்

என்று பிரமோத்தர காண்டமும் கூறுகின்றன.

விரிக்கிற் பெருகும்.

இலக்கிய இலக்கணங் கற்று, கவித்தன்மையைப் பெறுதலே சைவமெனின்? மகம்மதியர், கிறித்துவர் முதலானோர் கல்வி கற்றுக் கவிபாடுந் திறமுடையராய்ப் பலர் இருத்தலானும், சைவர் என்பவருள் பெரும்பாலார் அத்தகைய வன்மையர் அல்லராதலானும் பிறழ்தலோடு மாறுபாடும் வருமென்றொழிக.

அற்றேல், தமிழ் மக்களுட் சிலர் ஆரியர் வலையிற் சிக்கி அவர்க்கடியராய் அவருடைய பரிகலச் சேடமுண்ணலே பெருஞ் சைவமென மயங்கி ஆரியருடைய பக்ஷபாத வைதீக நெறியிற் சிலவற்றைக் களவாடிக்கொண்டு பிற தமிழ் மக்களைச் சூத்திரரென்று பழிக்கின்ற சற்சூத்திர ரென்பாரே சைவக் கொள்கை யாரெனின்?

தமிழ் நூல் மரபுப்படி ஐந்திணையைத் தழுவித் தலைவ னாந் தன்மையைப் பெற விரும்பாது வடமொழி மரபுப்படி

ஆரியர் கட்டுப்பாட்டுக்குட் சிக்கி சூத்திரன் (அடிமை) என்னும் பட்டத்தைப் பெற விரும்பும் அறிவுடைமையை என்னென்று சொல்லலாம்?

"சூத்ராணுமநிரவஸாநாம்" என்னும் பாணினி சூத்திரத்தும், ஆகமத்திலும் சற்சூத்திரன் என்று ஒரு சந்தர்ப்பம்பற்றிய வழக்கிருப்பினும் அது தமிழ்நாட்டு மரபல்லாமையின் தள்ளற்பாலதாம்.

அற்றேல், சைவமென்பது ஒரு சாதியாமெனின்? நன்று கூறினுய். சாதியென்பதே, மாதரின் மையலை மூலமாகவுடையதாமாதலின் வரையறுத்தல் கூடா. வரையறுப்பினும் அது பொருந்தாதென்க. இதை, வச்சிரசூசியுபநிடதத்திற் காண்க.

மற்றும்,சைவமென்னும் சாதியானது, ஆரியர் மதம்பற்றிக் கொள்ளும் நால்வகைச் சாதிகளுள்ளும், தமிழ் மரபுபற்றிய ஐந்திணை மக்களுள்ளும் அடங்காமையின் இது தந்நலங்கருதிய தக்காரின் கட்டுப்பாடாமென்று விடுக்க. பிறவெனின்? வேதாந்த சாதி, வைணவ சாதி, கௌமார சாதி, சாக்த சாதி என்பன முதலான சாதிகளும், வழக்கறிஞச் சாதி முதலான எண்ணிறந்த சாதிகளும் கொள்ளப்படுவனவாய் முரண் பட்டொழிவர் மக்கள் என்பதை யூகிக்க.

அற்றேலஃதாருக, சைவம் என்பதன் உண்மைப் பொருள்தான் யாதோவெனின்? "தெய்வஞ் சிவமே சிவனருள் சமயம் சைவஞ் சிவத்தொடு சம்பந்தம்" என்றபடியே, பெருந் தெய்வமாகிய சிவபெருமானது பேரருளே சமயமாம்.பெருந்தயையாகிய அப்பேரருளுட்கலந்து இரண்

டற்ற சம்பந்தமாய்நிற்கும் நிலை சைவமாம். அற்றேல், எல்லாம், வான்போல் சிவவியாபகத்திற் சம்பந்தப் பட்டவைகளாமெனி னும், அமுதக் கடலில் மூழ்கிக் கிடப்பினும் அமுத முண் டார்க்கு மரணமிலாத்தன்மை வருமாறு சிவனருள் வெளிக் குள் எல்லாம் அடங்கி நிற்பினும், அத்தகைய சிவனரு ளமுதை, மனத்தூய்மை, அன்பு, தவம், இரக்கம், உயிர் களிடத்துள்ள தயை, சிவாலயத்தையும், சிவனடியாரையும் சிவமாய்ப் பாவித்தல் முதலான சைவ சமய நன்னெறிகளால் உண்டு, பரசிவத்துடன் இரண்டறக் கலந்து நிற்கும் அத்து வித நிலையே உண்மையாகிய சைவமாம். இந் நிலையை யடைந்தோரே உண்மைச் சைவராவார் என்று உண்மை நூல்கள் முழங்குவதுடன் ஆன்றோரும் கூறுகின்றனர்.

மேற்கூறிப்போந்தவற்றால் நிகழ்ந்த முடிவுப்பொருள் யாதோ வெனின்?

உயிர்களெல்லாங் கடவுளுக்குத் திருமேனிகள், அவ் வுயிர்களுக்கு நிலைக்களமாகிய உடம்புகளெல்லாம் கடவு ளுக்கு ஆலயங்கள், ஆதலால் கடவுளிடத்து மெய்யன்பு டைய உண்மைச் சைவர்கள், அக்கடவுளோடு உயிர்களுக்கு உளதாகிய தொடர்புபற்றி அவ்வுயிர்களிடத்து அன்புடை யவர்களேயாவர்கள். உயிர்களிடத்து அன்பில்லாதபொழுது கடவுளிடத்துமாத்திரம் அன்புடையவர்போல் ஒழுகுதல் நாடகமாத்திரையேயன்றி உண்மையன் றென்பது தெள்ளி திற்றுணியப்படும். பிறவுயிர்களிடத்து அன்பில்லாதவர் தம் முயிர்க்கு உறுதிசெய்துகொள்ளமாட்டார். ஆதலால், அவர் தம்முயிரிடத்தும் இரக்கமில்லாதவரேயாவர் அவர், தமக் குத்தாமே வஞ்சகர் உண்மைச் சைவரலர் என்பதாம்.

இவ்விஷயத்தில், இராமலிங்கப் பெருமானாரின் முடிவுப் பாட்டு.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிருந்
தம்முயிர் போல் எண்ணி யுள்ளே
உத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந் தான் சுத்த
சித்துருவாய்எம்பெருமான் நடம்புரியும்இடமெனயான்
தெரிந் தேன் அந்த
வித்தகர் தம் அடிக் கேவல் புரிந்திட
என் சிந்தைமிக விழைந்த தாலோ.

சைவ நன்னிலை தழைத்தோங்குக.

சைவத்தெளிவு முற்றிற்று.

செல்வரங்கன் பிரஸ், சென்னை.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

காசி விஸ்வநாத பால பக்த சபை

நெ. 12, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்துத் தெருவு,

ஜி. டி. மதருஸ்.